செய்தி வெளியீடு எண்: 262/2018 நாள்: 01.05.2018

**பொதுமக்கள் தண்ணீரின் முக்கியத்துவைத்தை உணர்ந்து தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்!**

**வேலூர் மாவட்டம் உழைப்பாளர் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராம சபா கூட்டத்தில் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக்கொண்டனர்!!**

வேலூர் மாவட்டம் ஜோலார்ப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அம்மனாங்கோயில் ஊராட்சி புதுப்பேட்டை கிராமத்தில் உழைப்பாளர் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராம சபா கூட்டத்தில் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களும் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பெ.பெரியசாமி அவர்கள் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

வேலூர் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு கிராம சபா கூட்டம் நடைபெறுகிறது. அதனடிப்படையில் ஊராட்சியில் கிராம சபா நடைபெற்று கொண்டிருக்கிறது. மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவே இதுபோன்ற கிராம சபா கூட்டங்களில் திட்டங்கள் வகுத்து அதற்குரிய நிதி ஆதாரங்களை ஏற்படுத்தி செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கிராமசபா கூட்டத்தில் கிராம பொதுமக்கள் ஊராட்சியில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் என்ன என்பதையும் அவைகள் முழுமையாக செயல்படுத்தப்படும் திட்டங்களை வகுத்து அதற்குரிய நிதி ஆதாரங்களை ஏற்படுத்தி செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் அதற்கான வரசு செலவு அறிக்கையினை தெரிந்து கொண்டு மேலும் அவர்கள் சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கும் விதமாக இக்கூட்டம் நடத்தப்படுகிறது. மேலும் கிராமத்தில் உள்ள பிரச்சனைகள் குறித்தும் தெரிவித்தால் அது உடனடியாக பரிசீலனை செய்து நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கபட்டு பிரச்சனைகள் தீர்வு காணப்படும்.

கோடைகாலத்தில் வேலூர் மாவட்டத்தில் வறட்சி ஏற்படும் என கருதி அரசு முன்னெச்சரிக்கையாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனவே பொதுமக்கள் ஆகிய நீங்கள் தற்போது இருக்கும் தண்ணீரை வீணாக்காமல் சேமித்து உபயோகப்படுத்த மக்கள் உணர்ந்து செயல்படவேண்டும். மேலும் இந்த கிராம சபா கூட்டத்தில் சுகாதார துறை நோய் தடுப்பு முறைகள் குறித்தும் பயன்படுத்தப்பட வேண்டிய அவசியம் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. ரதனிநபர் கழிப்பறை அமைப்பதின் அவசியம் குறித்தும் பயன்படுத்தப்பட வேண்டிய அவசியம் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. கிராம வளர்ச்சி திட்டம் அந்தியோதியா திட்டம், பசுமை வீடுகள். பிரதம மந்திரியின் வீடுகள் வழங்கும் திட்டம், மகளிர் குழுக்கள் சிறப்பாக செயல்படுதல், விவசாயம் மேம்படுத்துதல் போன்ற வளர்ச்சி பணிகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. கிராம மக்கள் குடிநீர் பிரச்சனையை உடனடியாக தீர்க்க வேண்டும் என்றும், குப்பை கிடங்கு ஒன்று அமைத்து சுகாதாரத்தை காக்க வேண்டும என்றும் நெற்களம் வேண்டும் என்றும், சில பகுதிகளில்

சாலை பழுதடைந்துள்ளது அவற்றை சீரமைத்து கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர் இந்த நான்கு கோரிக்கைகள் உடனடியாக ஆய்வு செய்து நிவர்த்தி செய்ய தேவையான அனைத்து பணிகளையும் மேற்கொள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் அறிவுரைகளை வழங்கி கூட்டத்தில் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு மாவட்டத்தில் உள்ள 743 ஊராட்சிகளிலும் இந்த கிராம கூட்டங்கள் நடத்தப்படுகிறது. கிராம மக்கள் தங்களின் கிராமத்தில் செய்த வளர்ச்சிப்பணிகள் முறையாக செய்யப்பட்டுள்ளதா என்று தெரிந்து கொள்ள இந்த கிராம சபா கூட்டங்கள் நடத்தப்படுகிறது. மேலும் புதிய திட்டப்பணிகள் குறித்தும் விவாதிக்கபட்டு மக்களின் பிரச்சனைகள் தீர்க்க இந்த கூட்டம் நடைப்பபெறுகிறது. வேலூர் மாவட்டத்தில் தற்போதைய முக்கிய பிரச்சனை குடிநீர் தேவையான நமது மாவட்டத்தில் குடிநீர் பிரச்சனையை தீர்க்க போதிய அளவு புதிய ஆழ்துறை கிணறுகள் மற்றும் பழுதடைந்த பம்புக்களை சீர்செய்ய உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். மக்கள் தண்ணீரை மிகவும் சிக்கனமாகவும், உறிஞ்சு மோட்டார்கள் மூலம் தண்ணீரை எடுப்பதையும் தவிர்த்து அனைத்து தரப்பு மக்களுக்கு தண்ணீர் கிடைக்க உறுதுணையாக இருக்க வேண்டும். மேலும் சுகாதார வசதி குறித்தும், கிராமத்தில் உள்ள மாணவர்களின் எதிர்கால கல்விக்கு தேவையான கட்டமைப்பு வசதி குறித்தும், வேளாண்மைக்கு தேவையான புதிய தொழில்நுட்ப வசதி குறித்தும், கிராம பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிடுவதற்கு தேவையான வசதிகளை கூட்டத்தில் கிராம மக்கள் ஆலோசளைகளாக வழங்கிட வேண்டும் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம மக்கள் தங்களின் கிராமத்தை வளர்ச்சியடைந்த கிராமமாக செய்திட தகுந்த ஆலோசனைகளை தெரிவிக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூட்டத்தில் பேசினார்.

இந்த கூட்டத்தில் வருவாய்துறையின் மூலம் 10 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகையினையும், முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் 10 பயனாளிகளுக்கு நிதியுதவியனையும், 3 பயனாளிகளுக்கு வாரிசு சான்றிதழ்களையும், 7 சிறு குறு விவசாயிகளுக்கு சான்றிதழ்களையும், 20 நபர்களுக்கு மின்னனு குடும்ப அட்டையினையும் மொத்தம் 50 நபர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

சிறப்பு கிராம சபா கூட்டத்தில் மகளிர் திட்ட இயக்குநர் திரு.சிவராமன், திருப்பத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.ஜி.ரமேஷ், ஜோலார்பேட்டை முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் திரு.ஆர்.ரமேஷ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.பிரேம்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.இளவரசன், திரு.அன்பரசன், நாட்றாம்பள்ளி வட்டாட்சியர் திரு.பிரபுகணேஷ், வட்டார மருத்துவ அலுவலர் திருமதி.சுமதி மற்றும் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வேலூர்-9.